**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - 2015**

---

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 16 , 2014 திசெம்பர் 23 மற்றும் 2016 ஏப்ரல் 07 ஆந் திகதிய முறையே பிபீசீ இலக்கம் (2014) 27 மொத்த இலக்கம் (321), பிபீசீ இலக்கம் (2015) 38 மொத்த இலக்கம் (381), ஜீசீஎல் இலக்கம் (2014) 17 மொத்த இலக்கம் (520) மற்றும் ஜீசீஎல் இலக்கம் (2014) 18 மொத்த இலக்கம் (521) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. அம்பாந்தோட்டையை சர்வதேச முதலீட்டு மையமாக அபிவிருத்தி செய்வதற்காக மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலான தென்பகுதி அதிவேக வீதியை 96 கிலோமீற்றர் நீளத்தில் விரிவாக்கம் செய்தலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கு உதவியளித்தலிற்கும் வீதி வலையமைப்பை அபிவிருத்தி செய்தலும் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். அதிவேக பாதையின் நிர்மாண வேலைகள் மாத்தறையிலிருந்து பெலியத்த, பெலியத்தவிலிருந்து வெற்றிய, வெற்றியவிலிருந்து அன்டரவெவ, மற்றும் மாத்தளையிலிருந்து அம்பாந்தோட்டை என நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 250,936 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 1,892 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 226,142 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 1,708 மில்லியன் தொகை சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2020 சனவரியில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான

கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 152.17 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய ஆலோசனைக் கட்டணம் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1. நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் 2015 ஆம் ஆண்டின் போது | பயன்படுத்திய நிதிகள் 2015 திசெம்பர் 31 வரை |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 1,348 | 174,760 | 14,804 | 14,803 | 14,803 |
| இலங்கை அரசாங்கம் | 121 | 15,725 | 6,373 | 6,213 | 6,282 |
| **மொத்தம்** | **1,469** | **190,485** | **21,177** | **21,016** | **21,085** |

## 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான உத்தியோகத்தர்களின் பொறுப்புக்களை இனங்காண்பதற்கும் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் விரிவான ஒட்டுமொத்த திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் அத்தகைய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாத்தறையிலிருந்து வெலியத்த வரையிலான வெற்றியவிலிருந்து அன்டாறவெவ வரையிலான மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலான அதிவேகபாதையின் 03 பிரிவுகளின் நிர்மாண வேலைகள் 2016 சனவரியில் தொடங்கப்பட்டிருந்ததுடன் வெலிவத்த தொடக்கம் வெற்றியாவ வரையிலான ஏனைய பிரிவின் நிர்மாண வேலைகள் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளிலுள்ள காலதாமதங்கள் காரணமாக 2016 திசெம்பர் 31 இலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. உரிய அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கொள்வனவு சுவீகரிப்பு நடவடிக்கைகளிலுள்ள காலதாமதங்களினால் 45 சதவீதம் மாத்திரமே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. 2,149 கிறவுண் காணித்துண்டுகளை உள்ளடக்கிய 7,865 காணித்துண்டுகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுவீகரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், காணி சுவீகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலகர்களுக்கு ரூபா 9.86 மில்லியன் கூட்டுத்தொகையான ஊக்குவிப்புப் படிகள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு 2014 செப்தெம்பரில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 04 செயற்திட்டப் பணிப்பாளர்கள் ஒரு குழுத்தலைவர் ஒரு கொள்வனவு ஆலோசனையாளர், ஒரு சிரேஸ்ட காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் உத்தியோகத்தர், 03 பிரதி செயற்திட்டப் பணிப்பாளர்கள், நிதி முகாமையாளர் மற்றும் 02 சிரேஸ்ட பொறியிலாளர்கள் போன்ற முக்கிய பதவிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக காணப்பட்டது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 12 காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் அலுவலர்களை வேலைக்கமர்த்த அனுமதித்திருந்த போதிலும் செயற்திட்டமானது 12 காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் ஆலோசனையாளர்களை வேலைக்கமர்த்த நடவடிக்கை எடுத்திருந்தது. அத்தகைய நியமங்களானது 09/2007 2 (iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை அடிப்படையாக கொண்டு அலுவலரொருவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 67,680 தொகையான எரிபொருள் போக்குவரத்து மற்றும் வதிவிட படிகளை செலுத்துவதற்கு அனுமதித்திருந்தது.

**3.4 சர்ச்சைத் தன்மையான நடவடிக்கைகள்**

செயற்திட்டத்தால் நியமிக்கப்பட்ட வெளிநாட்டு ஆலோசனை நிறுவனமானது 2014 ஓகஸ்ட் வரை நகர்த்தப்பட்டிருந்ததால் செயற்திட்டமானது வடக்கு வீதி புனரமைப்பு செயற்திட்டம் என அழைக்கப்பட்ட ஏனைய செயற்திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட உள்ளூர் ஆலோசனையாளரொருவரை நியமித்திருந்தது. அதற்காக செயற்திட்டத்திற்கு ரூபா 40 மில்லியன் தொகையான ஆலோசனைக் கட்டணங்கள் செயற்திட்டத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.